
# போரூர் ஏரியில் வெளியேற்றப்பட்ட மக்களின் நிலை!



**23**.11.2006 அன்று காலை 5.20 மணியளவில் R.T.O. அதிகாரி மற்றும் பூவிருந்தவல்லி காவல்துறை அதிகாரி மற்றும் காவலாளிகள் 2000 பேர் கொண்ட குழுக்கள் போரூர் மின் சார வாரியம் எதிரில் சூழ்ந்தார்கள். அவர்களை பொது மக்கள் விசாரித்த போது 'தமிழக அரசு உங்களுடைய வீடுகள் அனைத்தையும் அகற்றப் போகிறது' என்ற தகவலை காவல் துறை அதிகாரி பொதுமக்களிடம் அறிவித்தார். அந்தத் தகவலை அறிந்த பொது மக்கள் போரூர் வி.ஏ.ஓ அதிகாரி அவர்களிடம் சென்று விசாரித்த போது, அந்த அதிகாரி பொதுமக்களிடம் சொன்ன செய்தி யாதெனில், "உங்களுடைய வீடுகளை அகற்ற வில்லை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்றப் போகிறோம்" என்று அறிவித்து, அங்கிருந்த பொதுமக்களை அனுப்பிவிட்டார்.

பொதுமக்கள் ஒன்று சேர்ந்து செல்வ கணபதி நகருக்கு வந்தார்கள். இரும்புக்கடை அருகில் அதிகாரி மற்றும் 2000 காவலாளிகள் நிறுத்தப்பட்டிருந்தனர். Earthmovers போன்ற கருவிகளினால் செல்வ கணபதி நகரில் இருந்த வீடுகள் அனைத்தும் இடிக்கப்பட்டன. பொதுமக்கள் மறியல் செய்தார்கள். அவர்களை காவல்துறையினர் விரட்டி அடித்தனர். பொதுமக்கள் தாக்கப்பட்டனர். வீடுகள் இடிக்கப்பட்டபோது விலை உயர்ந்த பொருட்கள், வீட்டில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் எதையும் எடுக்கவிடாமல் விரட்டி அடிக்கப்பட்டனர். தங்குவதற்கு இடமில்லாமல், பொது மக்கள் ரோட்டில் பரிதவித்துக் கொண்டு வீட்டையும், பொருட்களையும் இழந்த மனநிலையோடு, பள்ளிக்குச் செல்ல வேண்டிய குழந்தைகளோடும் கண்ணீர்விட்டு கதறி அழுதுகொண்டு இருந்தனர். அவர்கள் தங்குவதற்குக்கூட சரியானதொரு இடவசதி அரசு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.



24.11.2006 அன்று அண்ணாநகர் அகற்றப்பட்டது. இந்த நகரில் இருந்த வீடுகள் இடிக்கப்பட்ட போது, இரண்டு தெருக்களில் அமைந்துள்ள பட்டா வீடுகளும் இடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தத் தெருக்களில் சுமார் 60 வீடுகள் இருந்தன. இந்த வீடுகளும் எந்த விதமான முன்னறிவிப்பும் இன்றி, பட்டா உள்ளதா என்றும் விசாரிக்கப்படாமல், அவசரமாக இடித்து தள்ளப்பட்டன. இவர்கள் அனைவரும் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளதாக சொல்லப் படுகிறது.

25.11.2006 அன்று அம்பேத்கர் நகர் (மேற்கு) பகுதி இடிக்கப்பட்டது. பொதுமக்கள் அனைவரும் எதிர்ப்பு தெரிவித்தும், காவல்துறையினர் அதைப் பொருட்படுத்தாமல், பொதுமக்களைத் தாக்கி வீடுகள் அனைத்தையும் இடித்தார்கள். ஒருபுறம் வீடுகள் இடிக்கப்பட்டன. மறுபுறம் டோக்கன் வழங்கப்பட்டது. தெருக்களில் அதிகமாக தண்ணீர் தேங்கியிருந்ததால் மக்கள் பொருட்களை எடுத்தும், எடுக்காமலும் வெளியேறினார்கள்.

26-11-2006 அன்று அம்பேத்கார் நகர் கிழக்குப் பகுதி அகற்றப்பட்டது. பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். இரண்டு நபர்கள் காவல்துறை அதிகாரி அவர்களை எதிர்த்துக் கேள்வி கேட்டார்கள். அதனால் குணா, பாய் ஆகிய இருவரும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுக் காவலில் அடைக்கப்பட்டார்கள். வீடுகள் அனைத்தையும் இடித்த பிறகுதான் அவர்கள் இருவரையும் காவல் துறை அதிகாரி வெளியே அனுப்பினார்.

27-11-2006 அன்று பொது மக்கள் அனைவரையும் அம்பத்தூர் தாசில்தார் அலுவலகம் வரச் சொன்னார்கள். மேலும் மாற்று இடமாக கூடப்பாக்கத்தில் இடம் காண்பித்தார்கள. அந்த இடத்தில் பந்தல் போடப்பட்டிருந்தது. ஏரியில் வீடுகள் இடிக்கப்பட்ட போது கொடுக்கப்பட்ட டோக்கன்களுக்கு மட்டும்தான் மனை கொடுத்தார்கள்.